# பிள்ளையிற்கும் மற்றும் பாடசாலையிற்கும் நீங்கள் அவசியமானவர் !




## பாடசாலையில் நற்கல்வி பயில வீட்டு நிலைமை முக்கியமானது

**பிள்ளையுடன் சேர்ந்து விளையாடி கல்வியூட்டுங்கள்**

- ஆசிரியர்களின் ஆதரவை விட உங்கள் ஆதரவு பிள்ளைக்கு மேலதிக பயனுள்ளது.
- உங்கள் பிள்ளை பற்றியும் புதிய விடயங்களை எவ்வாறு கற்கிறது என்பதை நன்கறிந்தவர் நீங்கள்தான் – அதைப் பயன் படுத்துக.
- பிள்ளை வீட்டுப்பாடங்களைச் செய்யும் போது உங்களுக்கு எல்லாம் விளங்காவிட்டாலும் கூடவே இருங்கள்.பிள்ளை வாசிப்பதை என்னவென வினவுக.
- பிள்ளை பாடசாலையில் என்ன கற்றது என அல்லது எவ்வாறான அநுபவங்களைப் பெற்றது என உரையாடுக.
- பெற்றோர்சங்க கூட்டங்களில் கலந்து பாடசாலை விடயங்களில் நீங்கள் அக்கறையுடையவர் என்பதை பிள்ளைக்கு வெளிக்காட்டுக.
- ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்கவும் – நீங்கள் வாசிப்பதையும் மற்றும் அறிவதையும் வெளிக்காட்டுக.

## உங்கள் பிள்ளையிடம் கற்கும் ஆர்வத்தை உருவாக்குக

**– அறியும் ஆர்வமுள்ள பிள்ளைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கற்பதற்கான மேலதிக உத்வேகத்தைக் கொண்டுள்ளனர்.**

- பிள்ளை கேள்வி கேட்கும் போது பதிலளியுங்கள், பதில்களை சேர்ந்து கண்டு பிடியுங்கள்.
- பிள்ளை கேள்விகளைக் கேட்டு பதிலை சுயமாக கண்டறியும் போது பிள்ளையைப் பாராட்டவும்.
- பிள்ளையிடம் கேள்வி கேட்பதன் மூலம் அறியும் அவா ஒரு நல்ல விடயம் என்பதை வெளிக்காட்டவும்.

**www.fug.no**
நடைமுறைக்குகந்த பாடசாலை தொடர்பான விடயங்களை பெற்றோர் நோக்கில் வழங்கும்

**உங்களுக்கு தெரியுமா**

- பெற்றோரான நீங்கள் பிள்ளையின் நல் வளர்ப்பிற்கான பிரதான பொறுப்பைக் கொண்டுள்ளீர்கள் என்பதும் இதனால் பாடசாலை விடயங்களிலும் பங்கெடுக் கும் பொறுப்பைக் நீங்கள் கொண்டிருக் கிறீர்கள் என சட்டத்தில் குறிப்பிட்டு ள்ளது என்பது ?
- பாடசாலை விடயங்களில் ஒத்துழை க்கும் உரிமையைப் பெற்றோர்கள் அனைவரும் கொண்டுள்ளனர் என்பது?
- பெற்றோர்தெரிவுக்குழுவின் மூலம் பெற்றோர் தொடர்பாகவும், பெற்றோர் செயற்குழு(FAU)வின் அங்கத்தவராக மற்றும் ஒத்துழைப்புச்சங்கம்(SU) மற்றும் நிர்வாகம் மூலம் பிள்ளையின் பாடசாலையில் நிலைமைகளில் நீங்கள் செல்வாக்கு செலுத்தலாம் என்பது?
- பாடசாலை சகல மாணவர்களுக்கும் தகுந்த மற்றும் பொருத்தமான கல்வியை வழங்க வேண்டும் என்பது?
- ஆரம்ப பாடசாலையில் வழமையான கல்வியை பின்பற்ற இயலாத மாணவர்கள் பிரத்தியேக பயிற்சி மற்றும் தாய்மொழிமூலமான கல்வியைப் பெறும் உரிமையைப் கொண்டுள்ளனர் என்பது?
- வழமையான ஏற்பாட்டின் மூலம் திருப்திகரமான பலனைப் பெறாத மாணவர்கள் பிரத்தியேக கல்வி யூட்டலுக்கான உரிமையைக் கொண்டுள்ளனர் என்பது?
  பெற்றோர் இதற்கு பாடசாலையின் உதவியுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
- கல்வி ஏற்பாடு தொடர்பாக பெற்றோருடனான ஒத்துழைப்பிற்கு கருத்திற் கொள்ளப்படுவது என்பது ?

**பிள்ளைகளுக்கு பல சொற்களை வழங்குக**

- பிள்ளைகளை நூலகத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுடன் பொருட்களின் பெயர்களை உங்களுக்கு நன்கு பரீட்சயமான மொழியில் உரையாடுங்கள்.
- உங்களுக்கு நன்கு பரீட்சயமான மொழியில் வாசித்தும் மற்றும் கதைகளைக் கூறவும்.

பிள்ளைகளுக்கு ஏற்கனவே தெரிந்த சொற்களை புதிய சந்தர்ப்பங்களில் பயன்படுத்தவும், புதிய அர்த்தத்தை வழங்கவும்.

## பிள்ளைகள் வேறுபட்ட வழிகளில் அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள்

**சில பிள்ளைகள் பின்வரும் முறைகளில் சிறப்பாக கற்றுக் கொள்கின்றனர்**

- நீங்கள் செய்வதைப் பார்த்துச் செய்தல்
- படங்களைப் பார்த்தல்
- கதைகளைக் கேட்டல் அல்லது உரத்து வாசித்தல்
- பொருட்களைத் தொட்டுணர்தல் மற்றும் அவ்வாறே எழுதுதல்
- உடல் முழுவதையும் அசைத்தல்

உங்கள் பிள்ளை எவ்வாறு கற்றுக் கொள்கிறது?

பாடசாலையில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் மாணவருக்கான நேரங்கள், பெற்றோர்சங்கக்கூட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் பெற்றோர் ஆர்வம் காட்டுவது பிள்ளையின் கல்வியில் ஆர்வம் கொள்ள முக்கியமாகும். பெற்றோர் ஆசிரியருடனும் மற்றும் ஏனைய பெற்றோர்களுடனும் தொடர்பை ஏற்படுத்துவதன் ஊடாக பிள்ளை கல்விகற்பதற்கு உகந்த சூழல் உருவாகிறது. பெற்றோர் ஆர்வம் காட்டும் போது:

- ஓர் பலமான பிணைப்புவலை உருவாகுவதுடன், பெற்றோர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாகவும் மற்றும் உதவலாம்.
- பிள்ளைகளுக்குரிய பொதுவிதிகள் விடயமாக ஒத்துழைக்கலாம்.
- பாடசாலைச் சூழல் மேம்படுவதுடன் கேலிசெய்தல்,சத்தமும் சச்சரவுகளும் குறைதல் மற்றும் சந்தோசம் மேம்படும்.
- பிள்ளைகளின் வரவின்மை குறைவும் மற்றும் பாடசாலையில் சுறுசுறுப்பாகச் செயற்படுதல் அதிகரிக்கும்.
- ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் ஆசிரியர் நன்கு அறிந்து கொள்ளவும் கவனிப்பையும் வழங்கலாம்.
- பிள்ளைகள் பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவர்.
- இடைநிலை மற்றும் உயர்கல்வியைப் பலர் பூர்த்தி செய்வர்.

## www.fug.no

இது ஓர் அடிப்படைக் கல்விக்கான பெற்றோருக்கானசெயற்குழு (FUG) வின் ஒரு சேவையாகும். இங்கே நீங்கள்:

- எவ்வாறு பிள்ளையின் கல்வியில் பங்களிக்கலாம் எனவும் பாடசாலை விடயங்களில் ஆர்வம் காட்டலாம் என்பன போன்ற ஆலோசனைகளைப் பெறலாம்.
- செய்திகள் மற்றும் பாடசாலைக்கும் வீட்டிற்குமிடையிலான ஒத்துழைப்பு பற்றிய சிறந்த உதாரணங்களையும் காணலாம்.
- FAU மற்றும் SU அங்கத்தவர்கள் மற்றும் பெற்றோர் தொடர்பாளர்களுக்கும் நல் அறிவுரைகளையும் வியடங்களையும் பெறலாம்.
- சிறுபான்மைமொழிப் பெற்றோருக்குரிய பிரத்தியேக பக்கங்களுண்டு.
- பிள்ளைகள், பாடசாலை மற்றும் கல்வி பற்றிய வலைய தளங்களுக்கான மேற்காட்டிகளைப் பெறலாம்.

---

### அடிப்படைக்கல்விக்கான பெற்றோர் செயற்குழு (FUG) என்பது ஆரம்ப பாடசாலையில் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோருக்கான ஓர் தேசிய சங்கமாகும்.

### FUG அக்கறைக் கொண்டுள்ள விடயங்களாவன:

வீடு- பாடசாலை ஒத்துழைப்பு

- பாடசாலை விடயங்கள் தொடர்பாக பெற்றோர்களின் ஆர்வத்தைப் பேணுதல்.
- வீடு- பாடசாலை ஒத்துழைப்பு எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றி அறிவை வழங்கல்.
- பெற்றோர் எவ்வாறு தமது பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்கலாம் என்பது பற்றிய அறிவை வழங்கல்.
- பிரதான விடயங்களான அகச்சூழல், கேலிபேசுதல், பெற்றோர் சங்க கூட்டங்கள், பாடசாலை விடயங்கள் போன்ற இன்னும் பல விடயங்களை ஒழுங்குபடுத்த பெற்றோருக்கு உதவுதல்.

www.fug.no - இது ஒரு பாடசாலையில் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோருக்கான பயனுள்ள இணையமாகும்.

அடிப்படைக்கல்விக்கான பெற்றோர் செயற்குழு
www.fug.no
post@fug.no
FUG2010
வடிவமைப்பு: Månelyst as
படம்: Stockphoto
Oversatt av Tolketjenesten, september 2010